நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

**நாள் - 05.01.2024 STC. 305/2023** பு**.சா.1.** பாஸ்கர் **, த-பெ** மாரிமுத்து**.**

எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை -**

1) எனது வீட்டு முகவரி நம்பர் 426, வளம்பக்குடி போஸ்ட், திருக்காட்டுப்பள்ளி வழி, திருவையாறு தாலுக்கா. எதிரியின் முகவரி பாச்சாக்காட்டுப் பாளையம், அங்கன்வாடி அருகில் குடியிருந்தார். எனக்கும் எதிரிக்கும் 15 வருடத்திற்கு மேல் பழக்கம். எதிரியின் அம்மா என்னுடைய ஊரில் பிறந்ததால் எனக்கு எதிரியுடன் பழக்கம். என்னுடைய வீ டடில் எதிரி வந்து பணம் கொடுப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு குடும்ப செலவிற்காக பணம் கேட்டார். எதிரியின் மாமா ராமு வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். பணம் கொடுத்தபோது எதுவும் எழுதி வாங்கவில்லை. நான் ரொக்கமாக பணம் கொடுத்தேன். நான் ரூ.500/- நோட்டுக்கள் மற்றும் ரூ.100/- நோட்டுகள் கொடுத்தேன். நோட்டுகளின் எண்ணிக்கை எனக்கு ஞாபகம் இல்லை. எங்கு வைத்து பணம் கொடுத்தேன், யார் யார் உடன் இருந்தார்கள் என்பது குறித்து வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை.

2) இராமு என்பவர் சொன்னதன் அடிப்படையில்தான் பணம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நானாகத்தான் கொடுத்தேன். மாதத்திற்கு ரூ.100 க்கு ரூ. 1.50 வீதம் வட்டி தருவதாகவும், மூன்று மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாகவும் கூறினார். 3 மாதத்தில் பணம் கொடுக்காததால் 10 முறை பணத்தை திருப்பூர் சென்று கேட்டேன். நானும் அங்கு சிறிது நாட்கள் இருந்தேன். மேற்படி விபரத்தை அறிவிப்பிலோ அல்லது புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால் பணத்தை கேட்டதாக மட்டும் சொல்லியுள்ளேன். கடந்த 02.03.2023 அன்று காசோலையை எதிரி கொடுத்தார். அ.சா.1 காசோலையில் தேதி, தொகை மற்றும் கையெழுத்துக்கள் வேறு வேறு பேனாக்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தினமே மாலை காசோலை கொடுத்தார். கடனாக ரூ. 2,00,000/- கொடுத்தேன். நான் கடனாக கொடுத்த தேதியில் இருந்து 25 மாதங்கள் கழித்துதான் காசோலை கொடுத்தார். 25 மாதங்களுக்கு 1.50 பைசா வீதம் வட்டி எவ்வளவு வருகிறது என்றால் சுமார் ரூ.75,000/- வருகிறது. ரூ.75,000/- வட்டித் தொகையை சேர்த்து ஏன் கேட்கவில்லை என்றால் அன்றைய சூழ்நிலையில் கடன் தொகை கிடைத்தால் போதும் என்பதால் கேட்கவில்லை.

3) காசோலையை இரண்டு நாட்கள் கழித்து வசூலிற்கு தாக்கல் செய்ய சொன்னார். நான் தாக்கல் செய்துள்ளேன். போதிய பணம் இல்லை என்று காசோலை திருப்பப்பட்டது. போன் மூலமாக காசோலை திருப்பப்பட்டது பற்றி

கேட்டேன். அவர் தற்போது பணம் கொடுக்க முடியாது என்று கூறினார். எதிரி தனது குடும்பத்துடன் வளப்பக்குடிக்கு வந்து போவது உண்டு. அந்த சமயங்களில் பணம் எதுவும் எதிரி வாங்கவில்லை. குழுவில் எதிரி பணம் எடுக்கிறாரா என்று எனக்கு தெரியாது. நான் குழுவில் பணம் எதுவும் வாங்குவது, கொடுப்பது கிடையாது. 2020ம் ஆண்டு வளப்பக்குடி வந்தபோது குழுவில் எதிரி பணம் வாங்குவதற்கு முயற்சித்தபோது, திருப்பூருக்கு எதிரி செல்ல வேண்டியிருந்ததால் தனது காசோலையை உங்களிடம் கொடுத்து குழுவில் இருந்து பணம் எடுத்துக் கொடுக்குமாறு கூறினார் என்றால் சரியல்ல. குழுவில் பணம் எடுப்பதற்காக காப்புறுதியாக கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எவ்வித தொகையும் வாங்கவில்லை என்றும், அவ்வாறு வாங்கியிருந்தால் வட்டித் தொகையை கேட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. குழுவில் எவ்வித பணமும் வாங்கித் தராமல் எதிரி கொடுத்த காசோலையை முறைகேடாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) காசோலையில் உள்ள மாதம் திருத்தம் செய்தது போல் உள்ளது என்றால் சரிதான், அது எதிரி கொடுத்ததாகும். காசோலையை 2ம் தேதி வாங்கியதாக கூறிவிட்டு புகாரில் 3ம் தேதி வாங்கியதாக சொல்கிறீர்கள் என்றால் நான் 2ம் தேதி காசோலையை வாங்கினேன், காசோலையில் 3ம் தேதி என்று இருந்தது. புகாரில் 5வது பாராவில் காசோலை 3ம் தேதி எதிரி வழங்கியதாகவும், நான் பெற்றதாகவும் உள்ளது என்றால் 3ம் தேதி காசோலை கொடுத்ததாக எனது வழக்கறிஞரிடம் கூறினேன். அதனால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் ராமு வீட்டில் வைத்து பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்து இருந்தால் புகாரில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி குழுவிற்காக கொடுத்த காசோலையை திருப்பி தராமல் கேட்கும்போது தருவதாக கூறிவிட்டு அந்த காசோலையை வைத்து பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)